# Model Question Paper

1. குழந்தையின் முதல் ஆசிரியரும் சிறந்த ஆசிரியரும் யார்?
   அ. தாய் ஆ. பெற்றோர்
   இ. ஆசிரியர் ஈ. நண்பர்
2. குழு கற்றல் செயல்கள் நிகழும்பொழுது யார் வழிகாட்டியாக மனிதநேயத்தோடு செயல்பட வேண்டும்?
   அ. பெற்றோர் ஆ. ஆசிரியர்
   இ. குழந்தை ஈ. மூவரும்
3. கவிதைகளையும் செய்யுள்களையும் கற்பிக்கும் நோக்கமாவது?
   அ. எதுகை, மோனை ஒலிநயங்களை அறிய
   ஆ. செய்யுளை அறிய
   இ. உரைநடையினை அறிய
   ஈ. மொழியினை அறிய
4. கற்பித்தலைச் சிறப்பாக்குவதற்கும் வெற்றிகரமாக முடிப்பதற்கும் உள்ள திறவுகோல்?
   அ. உரைநடை ஆ. பயிற்றுவித்தல்
   இ. திட்டமிடுதல் ஈ. இலக்கணம்
5. எந்த கலைத்திட்டத்தில் பல்வேறு கற்பித்தல் அம்சங்கள் மாணவனின் ஆளுமையை வெளிப்படுத்துவதற்கு அமைக்கப்பட்டவையாகும்?
   அ. பயிற்சி ஆ நிர்வாகம்
   இ. திறமை ஈ. பள்ளி
6. தமிழகத்தில் செயல்வழிக்கல்வி அனைத்துப் பாடங்களுக்கும் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு?
   அ. 2007-08 ஆ. 2009-10 இ. 2011-12 ஈ. 2005-06
7. கற்றல் மேலாண்மை அமைப்பிற்கு ஓர் உதாரணம்
   அ. Moodle ஆ. Wikipedia
   இ. CD-ROM ஈ. PowerPoint
8. CALL
   அ. Communication And Language Learning
   ஆ. Computers And Language Learning
   இ. Computer Assisted Language Learning
   ஈ. Communication Aided Language Learning
9. கீழே தரப்பட்டுள்ள நான்கு சொற்களுள் சரியானது எது?
   அ. துகையல் அ. தொவையல்
   இ. துவையல் ஈ. தொகையல
10. பிரெய்லி முறையில் கல்வி கற்போர் யார்?
    அ. ஊனமுற்றோர் ஆ. பார்வையற்றோர்
    இ. செவிப்புலன் அற்றோர் ஈ. வாய்பேச இயலாதோர்
11. பல்வேறு துறைகளில் மாணவர்களின் திறன்களை வளர்க்க உதவுவது?
    அ. கணிணிக்கல்வி ஆ. செயல்வழிக்கல்வி
    இ. டால்டன்முறை ஈ. உரைநடைக்கல்வி

12. எதனை தூண்டும் வகையில் கற்றல்முறை இருக்க வேண்டும்?

அ. ஊக்கத்தை ஆ. ஆர்வத்தை

இ. கவனத்தை ஈ. மூன்றையும்

13. மதிப்பிடலும், தேர்வுகளும் எதனை மேம்படுத்துவதாக இருக்க வேண்டும்?

அ. செயல் ஆ. அனுபவம்

இ. கற்றலை ஈ. ஈடுபாடு

14. திட்டமிட்டுக் கற்றல் முறையை முதலில் உருவாக்கியவர்

அ ஸ்கின்னர்

ஆ பியாஜே

இ சிட்னி பிரஸ்ஸி

ஈ. பாவ்லோவ்

15. மதிப்புக் கல்வியின் பொருள்

அ. மதக்கல்வி

ஆ. நன்னடத்தைக் கல்வி

இ. விலைமதிப்புக் கல்வி

ஈ. கல்வியின் பொருளாதாரம்

16. எது குழந்தையின் களைப்பைப் போக்கி கற்றலில் கவனத்தை செலுத்த உதவும்?

அ. களப்பயணம் ஆ. செயல்வழி

இ. பார்த்தல் ஈ. எழுதுதல்

17. தொடக்கப் பள்ளிக்கு வரும் குழந்தை எந்த உணர்வுடன் வரும்?

அ. பயம் ஆ. தன்அடையாளம்

இ. இரண்டும் கலந்து ஈ. அழுகையுடன்

18. சமூக பங்கேற்பு, ஒப்பார்குழு பாராட்டு, கற்பிப்பவர் இல்லாமை போன்ற பண்புகள் எதற்கு உரியவை?

அ. நடத்தையியல் ஆ. அறிவாற்றலியல்

இ. கருத்தியல் ஈ. தொடர்பியல்

19. மீத்திறன் மாணவர்களிடம் காணப்படும் திறன்களில் ஒன்று

அ. ஆக்கத்திறன் ஆ. பின்தங்கல்

இ. தனித்திருத்தல் ஈ. நம்பிக்கையின்மை

20. எந்த ஒரு மனிதனின் பண்பாட்டையும் பெரிதும் நிர்ணையிப்பது.

அ. சுற்றுப்புறச் சூழல் ஆ. வாழும் நிலைகள்

இ. தேவைகள் ஈ. விருப்பம்

21. புதுமையான, தனித்தன்மையுள்ளவற்றை படைக்கும் திறன் எது?

அ. கவனம் ஆ. செயல்திறன்

இ. ஆக்கத்திறன் ஈ. ஊக்கம்

22. ஹெர்பார்ட்டின் முறையில் பாடம் கற்பித்தலில் முதல்படி?

அ. ஆயத்தம் ஆ. ஊக்குவித்தல்

இ. செய்முறை ஈ. மீள்பார்வை

23. கற்பித்தல் தொழிலை எவ்வாறு அழைத்தால் பொருத்தமானது என்பதனை பின்வருவனவற்றிலிருந்து தேர்ந்தெடு.

அ. கௌரவப்பணி

ஆ. உன்னதப்பணி

இ. அமைதி அளிக்கும் பணி

ஈ. மரியாதைக்குரியப்பணி

24. மனித வாழ்க்கையில் மன அழுத்தமமும் குழப்பமும் நிறைந்த பருவம்

அ. பிள்ளைப்பருவம்

ஆ. முழு மனிதப் பருவம்

இ. குமரப்பருவம்

ஈ. முதுமைப் பருவம்

25. மாணவரின் சமூகப்பண்பு வளர்ச்சிக்கு உதவுவது?

அ. முறைசார்ந்த கல்வி

ஆ. குடும்பம், ஆசிரியர், ஒப்பார் மற்றும் பள்ளி

இ. முறைசாரா கல்வி

ஈ. சமுதாயம்

26. பொருள் புரியாமல் கற்பது என்பது......

அ. மறதியை உண்டாக்கும்

ஆ. நினைவில் நிற்கும்

இ. கவர்ச்சிய உண்டாகும்

ஈ. ஈடுபாடு உருவாக்கும்

27. இலக்குமொழி என்பதன் பொருள்

அ. மூலமொழி ஆ. பெயர்ப்பு மொழி

இ. தாய்மொழி ஈ. மரபுமொழி

28. சமூக மாற்றத்திற்கான காரணம் எது?

அ. கலைத்திட்டம் ஆ. அலகுமுறை

இ. அணுகுமுறை ஈ. பயிற்சிமுறை

29. நீ என்ன வேலை செய்கின்றாய் என்பது எனக்குத் தெரியாது .........இது?

அ. தனி வாக்கியம் ஆ. கலப்பு வாக்கியம்

இ. வழு வாக்கியம் ஈ. பிழை வாக்கியம்

30. அடிப்படைக் கற்பித்தல் மாதிரி

அ. இராபர்ட் கிளேசர் ஆ. இராபர்ட் ஸ்பென்சர்

இ. ஜார்ஜ் லொஸானோ ஈ. பெஸ்டலாஜி

31. கேண்மியா, சென்மியா - இவற்றில் மியா என்னும் அசைச்சொல்லில் வரும் இகரம்.

அ. குற்றியலுகரம்

ஆ. குற்றியலிகரம்

இ. மகரகுறுக்கம்

ஈ. ஆயுதகுறுக்கம்

32. ஒரு சொல்லில் உள்ள அனைத்து எழுத்துகளும் மாறினாலும் பொருள் மாறுபடாது அமைவது?

அ. முற்றுப்போலி

ஆ. எதுகை

இ. மோனை

ஈ. போலி

33. யாருடைய நட்பு எதிர்பாராமலும் தன்னிச்சையாகவும் ஏற்படுகிறது?

அ. மாணவர்களின் ஆ. ஆசிரியரின்

இ. பெற்றோரின் ஈ. மூவரும்

34. கற்போரது பிரச்சனைகளை பரிவுடன் அணுகுபவராக யார் இயங்குதல் வேண்டும்?

அ. பெற்றோர் ஆ. மாணவர்

இ. ஆசிரியர் ஈ. மூவரும்

35. உலக அளவில் உள்ள பல கணிணிகளை இணைத்த மிகப்பெரிய தொகுப்பே….?

அ. இன்டர்நெட் ஆ. இணையதளம்

இ. டெலிமேடிக்ஸ் ஈ. டோபாலாஜி

36. கருத்து அடைதல் மாதிரி ……..மாதிரி குடும்பத்தைச் சார்ந்தது?

அ. தகவல் செயலாக்கம் ஆ. கருத்து உருவாக்கம்

இ. மாதிரி விளையாட்டு ஈ. மேற்கூறிய அனைத்தும்

37. துணைக்கருவிகளின் பயன்பாடு மாஒவர்களுக்கு எதனை ஏற்படுத்தும்

அ. வேகத்தை

ஆ. விருப்பத்தை

இ தெளிவை

ஈ. மூன்று குணங்களையும்

38. வகுப்பில் ஒழுங்கை நிலைநிறுத்த ஆசிரியர் கையாளுவதற்குரிய சிறந்த வழி?

அ. வினாக்கள் கேட்டல்

ஆ. பேசுதல்

இ. தகுந்த துணைக்கருவிகளை ஏற்ற இடங்களில் பயன்படுத்தல்

39. தன்மை, முன்னிலை, படர்க்கை என்பது ………குறிக்கும்.

அ. எண்ணிக்கை ஆ. இடம் இ. பெயர் ஈ. வினை

40. ‘நுந்தை’ என்பதன் பொருள்

அ. என் தந்தை ஆ. அவன் தந்தை

இ. உன் தந்தை ஈ. அவள் தந்தை

41. 50-69 வரை அறிவுத்திறன் உள்ளவர்கள்?

அ. குறைந்த அளவு மனவளர்ச்சி குறைபாடு உள்ளவர்கள்

ஆ. முட்டாள்

இ. அதிக மனவளர்ச்சி குறைபாடு உள்ளவர்கள்

ஈ. மனவளர்ச்சி குன்றியவர்கள்

42. மாணவர்கள் உடல் தசைகளைப் பயன்படுத்திக் கற்றுக்கொள்ளும் திறன்?

அ. இயக்கவளர்ச்சி ஆ. உடல்வளர்ச்சி

இ. மனவளர்ச்சி ஈ. மனவெழுச்சி

43. முதல் முத்தமிழ் காப்பியம்…..

அ. மணிமேகலை ஆ. சிலப்பதிகாரம்

இ. கம்பராமாயணம் ஈ. நளவெண்பா

44. Podcast என்பது சொற்களை இணைத்தல் என்ற ………….. மற்றும் ஒளிபரப்புதல் என்ற பதத்திலிருந்து எழுந்தது.

அ. iPod ஆ. iPhone

இ. telecast ஈ. keypad

45. உள்வாங்கும் திறன் என்பது

அ. கேட்டல் ஆ. பேசுதல் இ. எழுதுதல் ஈ. படித்தல்

46. கவிதை கற்றலின் நோக்கம் ………

அ. கவிஞனின் உணர்வை தாமும் பெறல்

ஆ. அணிநயம் பாராட்டல்

இ. பொருள் அறிதல்

ஈ. உரை எழுதுதல்

47. கீழே வருவனவறுள் எவற்றிற்கு ஆசிரியர் அதிகமான முக்கியத்துவம் தர வேண்டும்?

அ. மாணவர்களின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றம்

ஆ. மாணவர்களை பாடங்களை எழுத வைத்தல்

இ. கற்பித்தலில் சரியான பயிற்சி

ஈ. மாணவர்கள் பாடத்தை திறமையாக கற்க உதவுதல்

48. மதுரையில் நான்காம் தமிழ்ச் சங்கத்தை ஏற்படுத்தியவர்

அ. முத்துராமலிங்க தேவர்

ஆ. பாண்டித்துரைத் தேவர்

இ. பொன்னுசாமித் தேவர்

ஈ. சரவணப்பெருமாள் ஐயா

49. திறமையான கற்பித்தல் என்பது

அ. கருத்துக்களை திணிப்பது

ஆ. மாணவனை மகிழ்விப்பது

இ. மாணவனை சிந்திக்க வைப்பது

ஈ. செய்தியை அறிய வைப்பது

50. மெய்பாடுகள் எத்தனை

அ. 4 ஆ 8 இ. 9 ஈ.14